**பத்திரிகைச் செய்தி**

செ.வெ.எண்: 9/செப்டம்பர்/2011 நாள்: 5.9.2011

சென்னை, அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் உள்ள அகில் இந்திய குடிமைப் பணிகள் தேர்வு பயிற்சி மையத்தில் ஐஏஎஸ்/ ஐபிஎஸ் போன்ற குடிமைப்பணிகளுக்கான தேர்வுக்கு ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/பிற்படுத்தப்பட்ட வகுப்பு/ மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு/ சிறுபான்மையினர் மற்றும் இதர இனத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. வருகிற 2012 மே/ஜீன் மாதங்களில் மத்திய தேர்வாணையத்தால் நடத்தப்படும் முதல் நிலைத் தேர்வுக்கான ( Preliminary Examination) பயிற்சிக்கு மாணவர்களை தேர்ந்தெடுக்கும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும், இப்பயிற்சி மையத்தால் நுழைவுத் தேர்வு நடத்தப்பட்டு வருகிறது.

நடப்பு ஆண்டில் நடைபெறும் நுழைவுத் தேர்விற்கு ICR( Intelligence Character Recognition) விண்ணப்பப் படிவங்கள் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் மூலம் அனைத்து வகுப்பைச் சேர்ந்த பட்டப்படிப்பு முடித்த மாணவர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. 1.8.2012-ன் நாளின்படி விண்ணப்பங்கள் பெற தகுதியுள்ள மாணவ/ மாணவியர்களின் வயது/ பிறந்த நாள் விவரம்(as on 1.8.2012) வருமாறு

| COMMUNITY | YEARS | DATE OF BIRTH |
|---|---|---|
| SC(A), SC, ST | 21 TO 35 | 31.7.1977 க்கு பின் 31.7.1991 வரை |
| MBC, BC,BC(M) OBC | 21 TO 33 | 31.7.1979 க்கு பின் 31.7.1991 வரை |
| OC | 21 TO 30 | 31.7.1982 க்கு பின் 31.7.1991 வரை |

மேலும், கல்வி மற்றும் சாதிச் சான்றுகளுடன் வேலை நாட்களில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் நேரில் தொடர்பு கொண்டு பயனடையுமாறும், விண்ணப்பப் படிவங்களை 27.9.2011-க்குள் நேரடியாகவோ அல்லது மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம் என புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ப.மகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.